REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)

2 PAGES பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 MAY 2026 CLICK - 12 ₹. 1

**நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!**

**- CVPA NNT**

## முதல்வருக்கு CVPA-வின் முதல் வணக்கம்

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று இருக்கும், இன்றைய புதிய அரசின் முதல்வர், மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய்** அவர்களுக்கு நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்க உறுப்பினர் திரு.சந்திரசேகரன் அவர்கள் உடல் நல குறைவின் காரணமாக உயிர்நீத்தார் என்கிற தகவல் கேட்டு மிகவும் வருத்தம் அடைந்தோம். குறிப்பாக, திரு. சந்திரசேகரன் அவர்கள், நமது சங்கம் தொடங்கிய காலத்தில் இருந்து நம்மோடு பயணித்து வந்தவர். அவர் நமது சங்கத்திற்கு வழங்கிய அறிவுரைகள், ஆலோசனைகளை இன்றும் நாம் பின்பற்றி வருகிறோம். சௌகார்பேட்டையில் உள்ள புகைப்படக் கலைஞர்களின் முன்னேற்றத்திற்காக குரல் கொடுத்தவர்களில் மிக முக்கியமானவர் இவர். இதை அங்குள்ள கலைஞர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். திரு. சந்திரசேகரன் அவர்களின் பிரிவு என்பது, நமது சங்கத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

இந்த ஆண்டு நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். நமது குடும்ப விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கும், சிறப்பு விருந்தினர்களால், இவர்கள் பெற்றிருக்கும் மதிப்பெண் அடிப்படையில் கவுரவிக்கப் படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

வரும் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில், நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் கூட இருக்கிறது. இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம். எனவே சங்க உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து தங்கள் அடையாள அட்டையை ரினிவல் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு
**P.துரைபாபு**
CVPA செயலாளர்



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த, திரு.உசேன் அவர்களுடைய மகன்களுக்கு நடைபெற்ற சுன்னத் நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக, நிர்வாக குழு மற்றும் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்து தெரிவித்தனர்



வடசென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர் சீனு வீடியோ, திரு.சீனிவாசன் அவர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவரை நமது சங்கத்தின் சார்பில்,நிர்வாகிகள் நேரில் சென்று நலம் விசாரித்தனர், சங்கத்தின் சார்பில் இவருக்கு மருத்துவ உதவிக்காக உதவித்தொகை ரூபாய் 5000 கொடுக்கப்பட்டது.

## வருந்துகிறோம்

மத்திய சென்னை, ஆயிரம் விளக்கு பகுதியைச் சேர்ந்த நமது சங்கத்தின் மூத்த ஆயுட்கால உறுப்பினர், **SV** மீடியா விஷன் உரிமையாளர், திரு.**M.சந்திரசேகரன்** அவர்கள், (Life Member ID NO.563.வயது 71) கடந்த 26.04.26 அன்று இயற்கை மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என அனைவரும் கலந்து கொண்டு அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள். பின்னர் நமது பொதுக்குழு தீர்மானப்படி, மரணம் அடையும் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாய் திரு.சந்திரசேகரன் குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



Regd No. : 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

## நமக்கு நாமே
## குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtarunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351